# திருத்துறைப்பூண்டி நகராட்சி

## <u>இயல்பு கூட்ட அறிக்கை</u>

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 31.08.2021 செவ்வாய் கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்படும் இயல்பு கூட்ட அறிக்கை.**

**முன்னிலை திரு.என்.சந்திரசேகரன்,பி.இ.,**
**தனி அலுவலர்,**
**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

## பொருள் எண் 1:

நகராட்சி ஆணையர் அவர்களின் ஆகஸ்ட்-2021 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பதிவு செய்யலாம்.

## பொருள் எண் 2:

பார்வை:

1. வருவாய் துறையின் அரசாணை (நிலை) எண் 2208 நாள் 24.11.1988.
2. அரசாணை எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 30.03.1992.
3. அரசாணை எண் 85 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 22.05.1998.
4. மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 61.

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் அமைந்துள்ள இடம் புல எண் 132-ல் 1.54.50 ஹக்டேர் பரப்பளவில் வருவாய் துறைக்கு சொந்தமான விதையிடும் குளம் புறம்போக்காக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. திருத்துறைப்பூண்டி பேரூராட்சியாக இருக்கும்போது பேரூராட்சிக்கு சொந்தமான இடம் இல்லாத காரணத்தினால் பார்வை 1-ல் கண்டுள்ள அரசாணையின்படி மேற்கண்டுள்ள இடத்தினை 20.03.1990 முதல் 30 ஆண்டுகால குத்தகைக்கு பெறப்பட்டுள்ளது.

3பார்வை 2-ல் காணும் அரசாணையின்படி தேர்நிலை பேரூராட்சியாக இருந்த திருத்துறைப்பூண்டி, மூன்றாம் நிலை நகராட்சியாக 01.04.1992 முதல் தரம் உயர்த்தப்பட்டு, பின் பார்வை 3-ல் கண்டுள்ள அரசாணையின்படி 22.05.1998 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் பேரூராட்சியாக இருந்த காலத்திலருந்து 30 ஆண்டுகாலமாக ஆண்டுக் குத்தகைக்கு பெறப்பட்டு, தற்போது நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு பொதுமக்களின்

பயன்பாட்டில் உள்ளது. மேற்படி இடத்திற்கான குத்தகை காலம் 20.03.2020ஆம் தேதியுடன் முடிவடைந்துவிட்டது.

பார்வை 4-ல் கண்டுள்ள மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 61ன்படி நகராட்சி எல்லைக்ளுக்குள் அமைந்த சாலைகளும் பிற பொது இடங்களிலுள்ள மண், அடி மண், வடிகால்கள், சாக்கடை அமைப்புகள், மதகுகள், நடைபாதைகள், மரங்கள், கற்கள், பிற பொருட்கள், கருவிகள், மற்றும் பிற பொருட்கள் உள்ளடங்கலாக நகராட்சியிலுள்ள பொதுச்சாலைகள் அனைத்துடனும் நடைபாதை கற்கள் மற்றும் பிற பொருட்கள் அனைத்துப் பணிகள், பொருட்கள் சுரங்கப்பாதை, மேம்பாலங்கள், சதுக்கங்கள், தெருக்கள், தெரு ஓரங்கள், வழி பாலங்கள், பூங்காக்கள், தோட்டங்கள் மற்றும் (மத்திய அல்லது மாநில அரசின் சொத்தாக அல்லது அவற்றின்கட்டுப்பாட்டின்கீழ் வருவன அல்லாத) பிற புறம்போக்கு நிலங்கள் ஆகியவற்றிற்கென வகை செய்யப்பட்ட பிற பொருட்கள் அனைத்தும் அந்த நகராட்சியிடம் உற்றடைதல் வேண்டும்.

ஆனால், வருவாய் துறையினால் ஆண்டுதோறும் தொடர்ந்து குத்தகை தொகைக்கான கேட்பு தொகை கோரப்பட்டு வருகிறது. அதன்படி பசலி ஆண்டு 2020-21 வரை செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 61ன்படி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம், அமைந்துள்ள புல எண் 132 புறம்போக்கு நிலமாக வகைபாடு செய்யப்பட்டுள்ள 1.54.50 கெக்டேர் பரப்பளவு இடத்தினை இந்நகராட்சிக்கு உற்றடையச் செய்து நகராட்சியின் பயன்பாட்டிற்கு அனுபவித்துக்கொள்ள உரிமை வழங்குமாறு அரசினை கேட்டுக்கொள்ள அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அரசினை கேட்டுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் /2021/எப்1)**

## பொருள் எண் 3:

இந்நகராட்சிப் பகுதியில் டெங்கு தடுப்பு நடவடிக்கையில் டெங்கு காய்ச்சல் பரப்பும் கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல் வீடு வீடாக சென்று டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள முற்றிலும் தற்காலிக முறையில் டெங்கு தடுப்பு மஸ்தூர் (Domestic Breeding Checker) 17 நபர்கள் நியமித்திட திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நியமித்துள்ள தினக்கூலி ஊதியத்திற்கு உட்பட்டு நியமித்திட ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.8.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. நோய் தடுப்பு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. உத்தேச செலவினம் ரூ.8.00 இலட்சம் திடக்கழிவு மேலாண்மை நிதியில் மேற்கொள்ள அனுமதிக் கலாம்.

**(ந.க.எண் 1818/2020/எச்1)**

## பொருள் எண் 4:

திருத்துறைப்பூண்டி நகராட்சிப் பகுதியில் டெங்கு தடுப்பு நடவடிக்கை பணியாக பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்த விளம்பரம் " லட்சியம் வெல்லும் " மாத இதழில் வெளியிட்டதற்கான கட்டணம் ரூ.5000/- (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) வழங்கவும், இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விளம்பரம் வெளியிட்ட இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண் 1818/2020/எச்1)**

**பொருள் எண் 5:**

இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவிற்கு கோவிட்-19ன்கீழ் முன்களப் பணியாளர்கள் அனைவருக்கும் தினசரி சத்துள்ள பொருட்கள் சாப்பிட உணவு பொருட்கள் வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் காணொலி காட்சி ஆய்வு கூட்டம் 28.05.2021-ல் அறிவுரை வழங்கினார்கள். அதன்படி திருத்துறைப்பூண்டி நகராட்சிப் பணியாளர்கள் மற்றும் அனைத்து முன்களப் பணியாளர்களுக்கும் பால், சுண்டல், இரண்டு அவித்த முட்டைகள் வழங்கிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு மூன்று வாரக் காலத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். 31.05.2021-ல் விலைப்புள்ளி கோரியதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1. | மெஸ்ஸர்ஸ் ரவிசங்கர் முட்டை வணிகம், ஆர்.எஸ். ரோடு, திருத்துறைப்பூண்டி. | 50000/- |
| 2. | கே.பி.எஸ். மளிகை, 2. சன்னதி தெரு, திருத்துறைப்பூண்டி. | 52950/- |
| 3. | மெஸ்ஸர்ஸ் சேகர் முட்டை வணிகம், 33.காமராஜர் தெரு, திருத்துறைப்பூண்டி. | 50750/- |

மேற்கண்டுள்ள நிறவனத்திலிருந்து வரப்பட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள ரூ.50000/-க்கு வழங்கியுள்ள மெஸ்ஸர்ஸ் ரவிசங்கர் முட்டை வணிகம், ஆர்.எஸ். ரோடு, திருத்துறைப்பூண்டி நிறுவனத்தின் விலைப்புள்ளி யினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்திற்கு முன் அனுமதி வழங்கிய பணிக்கு கோவிட்-19 நோய் தடுப்பு மற்றும் பால், முட்டை மற்றும் சுண்டல் வழங்கிட செலவினம் ரூ.50000/-க்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண் 740/2020/எச்1)**

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.